# Makkal Kural

## Chola ties up with Ola

**Date: 02/07/2015 | Edition: Chennai | Page: 11 | Source: Bureau | Clip size (cm): W: 17 H: 12**

**Clip: 1 of 1**


# ‘ஓலா’ டிரைவர்கள் சொந்தமாக கார் வாங்க சோழமண்டலம் பைனான்ஸ் கடன்

## தினசரி செல்போன் மூலம் செலுத்தும் புதுமை திட்டம்: நிர்வாக இயக்குனர் வெள்ளையன் சுப்பையா தகவல்

சென்னை, ஜூலை. 1–

முருகப்பா குரூப் சோழமண்டலம் பைனான்ஸ் ஓலா கேப்ஸ் டிரைவர்களுக்கு சொந்தமாக கார் வாங்க கடன் வழங்குகிறது. புதுமை திட்டமாக தினசரி தவணையாக செல்போன் மூலம் செலுத்தும் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது என்று நிர்வாக இயக்குனர் வெள்ளையன் சுப்பையா தெரிவித்தார்.

ஓலா கேப்ஸ் நாடு முழுவதும் 100 நகரங்களில் 1.5 லட்சம் கால்டாக்சிகள் உள்ளது. இது டிரைவர்களை சொந்தமாக கார் வாங்க ஊக்குவிக்கிறது. இதற்காக சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் பைனான்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தம் செய்துள்ளது. இந்த பிரகதி கார் கடன் திட்டத்தில் ஓலா கேப்ஸ் டிரைவர் வருமானத்தை ஒளிவுமறைவின்றி வெளியிடுவதால், அதிலிருந்து



தினசரி தவணை செலுத்தும் வசதியை சோழமண்டலம் ஏற்றுள்ளது. இந்த ஓலா டிரைவர்களுக்கு சிக்கன வட்டியில் கடன் வழங்கப்படுகிறது. உடனடி கடன் அனுமதி, எளிமையாக படிவம் வசதிகளை சோழமண்டலம் வழங்குகிறது என்று அவர் தெரிவித்தார்.

ஓலா கேப்ஸ் தமிழ்நாடு பிரிவு தலைவர் ரவி தேஜா பேசுகையில், ஓலா டிரைவர்கள் சொந்த கார் உரிமையாளர்களாக மாறுவதற்கு சோழமண்டலம் உதவுகிறது. தினசரி தவணை செலுத்துவது வரவேற்கத்தக்கது. எளிதானது. ஓலா டிரைவர்களிடையே நம்பிக்கை, ஆதரவு, நல்ல கனிவான சேவ்வை வழங்குகிறது என்றார்.

சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் பைனான்ஸ் நாடு முழுவதும் 534 கிளைகளுடன் ரூ. 25 ஆயிரம் கோடி நிதியை திறமையாக நிர்வகித்து வருகிறது.

இதற்கு 7 லட்சத்து 50 ஆயிரம் வாடிக்கையாளர்கள் உள்ளனர். இது சிறப்பாக செயல்பட்டு இதன் ஷேர்தாரர்களுக்கும் நம்பிக்கையாக செயல்படுகிறது என்றார் .